# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–4 |
| 2 | துறையின் அமைப்பு | 4–5 |
| | 2.1 பதிவு மண்டலங்கள் | 5–7 |
| | 2.2 உதவி பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் | 7 |
| | 2.3 பதிவு மாவட்டங்கள் | 7–8 |
| | 2.4 தணிக்கை அலகுகள் | 8–9 |
| | 2.5 சார்பதிவாளர் அலுவலகங்கள் | 9–10 |
| | 2.6 புலனாய்வுப் பிரிவு | 10–11 |
| | 2.7 பதிவுத்துறை பயிற்சி மையம் | 11–12 |
| 3 | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 12 |
| | அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 12 |
| | ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 13 |
| | 3.1 தமிழ்நாடு முத்திரைச் சட்டம் | 14–15 |

| | | |
|---|---|---|
| 4 | ஆவணப் பதிவு மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் | 16 |
| | 4.1 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு | 17–18 |
| | 4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி | 19–20 |
| 5 | உள்ளாட்சி அமைப்புகளுக்கு முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரி பகிர்ந்தளித்தல் | 20–21 |
| 6 | பதிவுச் சட்டம், 1908 | 21 |
| | 6.1 அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளை பதிவு செய்ய தடை | 21–22 |
| | 6.2 உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு குறித்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் உச்சவரம்பு மாற்றியமைக்கப்பட்டது. | 22 |
| | 6.3 நிறுவனங்கள் இணையும் போது அல்லது மாற்றியமைக்கும் போது நடைபெறும் சொத்து பரிமாற்றங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைப்பு | 23–24 |
| 7 | துணைமைப் பணிகள் | 24 |
| | 7.1 சங்கங்கள் | 24–29 |

| | | |
|---|---|---|
| | 7.2 சீட்டுகள் | 29 |
| | சீட்டு நடுவம் | 29–30 |
| | மேல்முறையீடு | 30 |
| | 7.3 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் | 30 |
| | 7.4 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் | 31–32 |
| | 7.5 ஆவண எழுத்தர்கள் | 32–33 |
| | 7.6 திருமணப் பதிவு | 33–24 |
| 8 | துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி | 34 |
| | **8.1** ஒருங்கிணைந்த இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கம் | 34–36 |
| | **8.1.1** ஸ்டார் 2.0 – ல் முன்னிலைப் படுத்தப்படும் முதன்மையான சிறப்பம்சங்கள் | 36–38 |
| | 8.2 இணைய வழி வில்லங்கச் சான்று மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்குதல் | 38–39 |
| | 8.3 இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் | 39 |

| | | |
|---|---|---|
| | 8.4 இணையவழியாக பணம் வங்கிகளில் செலுத்திடும் முறை | 39–40 |
| | 8.5 இணையதளம் மூலம் வில்லங்கச் சான்றுகளை கட்டணமில்லாமல் பார்வையிடும் வசதி | 40–41 |
| | 8.6 மின்னணு முத்திரையிடுதல் | 41–42 |
| | 8.7 வலை நிழலி மற்றும் மின்னணு ரேகை பதிவு செயல்படுத்திடுதல் | 43 |
| | 8.8 CUG இணைப்புகள் | 43–44 |
| | 8.9 சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆவணத் தொகுதிகளை இலக்கமயமாக்கல் | 44 |
| | 8.10 இணையவழி பட்டா மாறுதல் | 44–45 |
| | 8.11 BSNL மூலம் மாற்று VPN இணைப்பு | 45 |
| | 8.12 மடிக்கணினிகள் வாங்குதல் | 46 |
| 9 | உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளில் மேம்பாடு | 46 |
| | 9.1 கட்டடங்கள் கட்டுதல் | 46–47 |
| | 9.2 தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல் | 47 |
| 10 | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | 48 |

## வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண்.11

## முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2019–2020

### முன்னுரை

சுதந்திர இந்தியாவிற்கு முன்பே, அதாவது 1864ஆம் ஆண்டிலிருந்தே பதிவுத் துறை தனது செயல்பாடுகளைத் துவக்கியது. இத்துறை மாநில ஆட்சி நிருவாகத்தில் மிகவும் பழைமை வாய்ந்த துறைகளில் ஒன்று என்ற பெருமையான மரபினைக் கொண்டது. தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் பல துறைகளுள், பதிவுத்துறை மக்களுக்கு ஆற்றும் இன்றியமையாப் பணிகளில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி முன்னேற்றம் கண்டதில் அரசின் முகப்புத் துறையாக உருவெடுத்துள்ளது. பதிவுத் துறை பொதுமக்களிடம் நேரடி தொடர்புடைய முக்கியத்துவம் வாய்ந்த துறையாக பொதுமக்களுடன் ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய நெகிழ்ச்சியான நெடும் பயணத்தை கடந்துள்ளது. ஒரு சாமானிய மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் தனது வாழ்வோடிணைந்த

நிகழ்வுகள் அனைத்திலும் இனிய அனுபவம் பெறுவதில் பதிவுத் துறையின் பெரும்பங்கு இன்றியமையாதது. பதிவுத் துறை, பொது மக்களின் சொத்து பரிவர்த்தனை ஆவணப் பதிவு செய்வதிலும், திருமணப் பதிவு மற்றும் பிறப்பு இறப்பு பதிவு ஆவணங்களுக்கும் காப்புப் பொறுப்பாளராக விளங்குகிறது. பதிவுத் துறையால் அளிக்கப்படும் இவ்வாவணங்களின் நகல்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்க ஏதுவாக உண்மைத்தன்மை வாய்ந்தவையாகவும், போலி ஆவணங்கள் மூலம் சொத்து அபகரிப்பு முறைகேடுகளிலிருந்து பாதுகாப்பதாகவும் உள்ளன. ஆவணப்பதிவு என்பது பொதுமக்களுக்கு அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஒரு தகவலை அறிவிப்பு செய்வதாக அமைகிறது மற்றும் அசையாச் சொத்துக்களின் உரிமை ஒப்பாவணங்களை கேட்டறிந்து சரிபார்க்க ஏதுவாகவும் அமைகிறது. ஆகவே சொத்து பரிவர்த்தனை ஆவணப்பதிவு, திருமணப்பதிவு, சீட்டு மற்றும் சங்கம் பதிவு மற்றும் பிறப்பு, இறப்பு சான்று நகல்களை அளித்தல் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் தவிர்க்க முடியாத நிகழ்வாக அமைவதால் பதிவுத்துறை பொதுமக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த துறையாக அமைகிறது. மாநிலத்தில்

வணிகவரித் துறைக்கு அடுத்தபடியாக அதிக வருவாயை ஈட்டித் தருவது பதிவுத் துறையாகும்.

பதிவுத் துறையை நவீனப்படுத்தும் நோக்கில், துறையின் முழுச் செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதில் முன்னோடியாக திகழ்ந்து, தடையில்லா நற்பணிகளை நாள்தோறும் வழங்குகிறது. பதிவுத்துறை இணையதளத்தில் எளிய மற்றும் வெளிப்படையான முறையில் தனது பணிகளை பொதுமக்களுக்கு அளிக்கும் வகையில் அவர்களது சொத்து மற்றும் இதர ஆவண பதிவு தொடர்பான விவரங்களை உலகில் எங்கிருந்தும் சரிபார்த்துக்கொள்ள ஏதுவாக தேவையான வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு துறையுடனான தொடர்பினை இனிய அனுபவம் ஆக்கிட அனைத்து வசதிகளையும் அளிப்பதில் புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. மேலும் சொத்துப் பரிவர்த்தனை ஆவணப் பதிவு, திருமணப் பதிவு சீட்டு மற்றும் சங்கப் பதிவு ஆகிய அனைத்துப் பதிவுகளும் காகிதமில்லா இணையவழி பதிவு நடைமுறை பல பதிவுத்துறை அலுவலகங்களில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1865–66ஆம் ஆண்டில், 1.25 இலட்சம் ஆவணங்களின் மூலம் ரூ.1.43 இலட்சம் வருவாயை இத்துறை ஈட்டியது. பதிவுத்துறை, 2018–19 ஆம் நிதியாண்டில் 25.73 இலட்சம் ஆவணங்கள் மூலம் ரூ.11071.02 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. இது இத்துறையின் வளர்ச்சிக்கு சாட்சியாக அமைந்துள்ளது.

## 2. துறையின் அமைப்பு

துறையின் தலைவராக பதிவுத் துறைத் தலைவர் உள்ளார். அவரின் அலுவலகம் பட்டினப்பாக்கம், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–28ல் அமைந்துள்ளது. பதிவுத்துறைத் தலைவருக்கு உதவியாக நான்கு இரண்டாம் நிலை அலுவலர்களின் பதவியும் அவர்களால் கவனிக்கப்படும் பொருண்மைகளின் விவரமும் பின்வருமாறு:

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு) – இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் தொடர்பான பொருண்மைகள் மற்றும் கணினிமயமாக்கல்.

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி) – வழிகாட்டி மதிப்பை திருத்தியமைத்தல், 1899 ஆம் ஆண்டு

இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(5) மற்றும் 47A(6) தொடர்பான செயல்பாடுகள் மற்றும் பிரிவு 56(2) தொடர்பான வழக்குகள்.

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) – திருமணப்பதிவு தொடர்பான இனங்கள், தணிக்கை தொடர்பான இனங்கள், கட்டடக் களப்பணி மற்றும் இதர பணிகள்.

- கூடுதல் சீட்டுப் பதிவாளர் – சீட்டுகள், சங்கங்கள் மற்றும் துறையின் உள்கட்டமைப்பு.

பொது மக்களுக்கு வசதியை ஏற்படுத்தவும், எளிதான அணுகுமுறையை ஏற்படுத்தவும், இத்துறை பல்வேறு பதிவு மண்டலங்களாக ஒருங்கமைக்கப்பட்டு அதிக எண்ணிக்கையிலான கள அலுவலகங்களை கொண்டுள்ளது.

## 2.1 பதிவு மண்டலங்கள்

மாநிலம் முழுவதும் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அத்தகைய பதிவு மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒன்பது பதிவு மண்டலங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ்

செயல்படுகின்றது. **9** பதிவு மண்டலங்களின் விவரம் பின்வருமாறு :

| **வ. எண்** | **பதிவு மண்டலம்** | **பதிவு மண்டலத்தின் வரம்பிற்குள் உள்ள பதிவு மாவட்டங்கள்** |
|---|---|---|
| 1. | சென்னை | வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம். |
| 2. | வேலூர் | வேலூர், செய்யார், அரக்கோணம் மற்றும் திருவண்ணாமலை. |
| 3. | கடலூர் | கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், திண்டிவனம் மற்றும் விருத்தாச்சலம். |
| 4. | சேலம் | சேலம் (கிழக்கு), சேலம் (மேற்கு), கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தர்மபுரி. |
| 5. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை. |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை மற்றும் கும்பகோணம். |
| 7. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், உதகமண்டலம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம். |

| | | |
|---|---|---|
| 8. | மதுரை | மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), திண்டுக்கல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் காரைக்குடி. |
| 9. | திருநெல்வேலி | திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேரன்மகாதேவி மற்றும் மார்த்தாண்டம். |

## 2.2 உதவி பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள்

துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் தங்களது மண்டலத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும் பொறுப்பாக உள்ள நிலையில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு உதவியாக உதவிப் பதிவுத் துறைத் தலைவர்களின் கீழ் செயல்படும் வட்டார அலுவலகங்கள் உள்ளன.

## 2.3 பதிவு மாவட்டங்கள்

மாநிலம் முழுவதும் **50** பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் அதிகப் பணிச்சுமை உள்ள **16** மாவட்டங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை

அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 34 பதிவு மாவட்டங்கள் மாவட்டப் பதிவாளர்களின் தலைமையில் செயல்படுகின்றன. இந்த உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் / மாவட்டப் பதிவாளர்கள், தங்களது ஆட்சி எல்லைக்குள், சங்கங்களின் பதிவாளராகவும், துணைச் சீட்டுப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராகவும் செயல்படுகின்றனர். முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு உரிமமும் வழங்குகின்றனர்.

## 2.4 தணிக்கை அலகுகள்

பதிவுத்துறை அதிக வருவாய் ஈட்டும் துறையாக உள்ளதால் அதன் கள அலுவலகங்களில் செய்யப்படும் பணிகளைத் தணிக்கை செய்வதற்கு, வலுவான தணிக்கைப் பிரிவு இருப்பது மிக அவசியமானதாகும். எனவே, பதிவுத்துறை தணிக்கைப் பிரிவு 45 அலகுகளைக் கொண்டு, ஒவ்வொன்றும் ஒரு தணிக்கை மாவட்டப் பதிவாளரின் தலைமையில் இயங்குகின்றது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நூறு சதவிகிதம் தணிக்கை செய்து, குறைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றைச் சுட்டிக் காட்டி

வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ள நேர்வுகளில் அந்த இழப்புத் தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. தணிக்கை மாவட்டப் பதிவாளர்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது ஒவ்வொரு மண்டலத்தின் துணைப் பதிவுத் துறைத் தலைவரின் பொறுப்பாகும்.

## 2.5 சார்பதிவாளர் அலுவலகங்கள்

பரப்பளவு மற்றும் மக்கள் தொகையில் ஒரே மாதிரியாக உள்ள இதர மாநிலங்களுடன் ஒப்பு நோக்குகையில், தமிழ் நாட்டில் பொது மக்கள் எளிதில் அணுகுவதற்கு ஏதுவாக 578 சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றுள் மூன்று முகாம் அலுவலகங்கள் உள்ளன. மேட்டூர் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள குளத்தூர், சேந்தமங்கலம் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள கொல்லி மலை மற்றும் கொம்மடிக்கோட்டை சார்பதிவகத்துடன் இணைந்துள்ள படுக்கப்பத்து ஆகிய கிராம சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் இம்முகாம் அலுவலகங்களுக்கு வருகை புரிந்து தொடர்புடைய சார்பதிவாளர்கள் பதிவு பணி மேற்கொள்கின்றார்கள். பிற

நாட்களில் தங்களது முதன்மை அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.

ஆவணங்களின் பதிவு, பல்வேறு திருமணச் சட்டங்களின் கீழ் திருமணங்கள் பதிவு ஆகியவை சார்பதிவாளர்களின் முக்கியமான கடமைகளாகும். இதுவன்றி, ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கான பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளின் பாதுகாவலராகவும், 1982ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் உதவி பதிவாளர்களாகவும் செயல்படுகின்றனர்.

## 2.6 புலனாய்வுப் பிரிவு

அசையாச் சொத்து தொடர்பான ஆவணம் எழுதப்படும் போது அவற்றில் உள்ள கட்டடம் தொடர்பான விவரத்தையும் தெரிவிக்கப்பட வேண்டும். முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் கட்டடப் பகுதிக்கும் சேர்த்து விதிக்கப்பட வேண்டுமென்பதால் கட்டட மதிப்பிற்கு ஏற்றவாறு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்திட புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவு, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) மற்றும் கட்டடங்களை

சரியான மதிப்பீடு செய்யும் பொருட்டு இரண்டு உதவி செயற்பொறியாளர்களை உள்ளடக்கியதாகும்.

**2.7 பதிவுத்துறை பயிற்சி மையம்**

பதிவுத்துறையில் அதிக அளவில் சட்டங்கள் அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்படுவதால், அவற்றின் பல்வேறு வகைமுறைகளையும் மற்றும் தொடர்புடைய இதர வழிமுறைகளையும் துறையின் அலுவலர்களும் பணியாளர்களும் தெரிந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். அவ்வப்போது இச்சட்ட விதிகளில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்படுகின்றன. மேலும், துறையின் அன்றாட செயல்பாட்டில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு பெருமளவில் உள்ளது. இவ்விவரங்கள் தொடர்பாக அனைத்து பணியாளர் மற்றும் அலுவலர்களுக்கு உரிய அறிமுக மற்றும் பணியிடைப் பயிற்சி வழங்குதல் இன்றியமையாததாக அமைந்துள்ளது.

இந்த நோக்கத்தினை நிறைவேற்றிட, 1996–ஆம் ஆண்டு முதல் சென்னையில் பதிவுத் துறைப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரின் தலைமையில் இம்மையம் செயல்படுகிறது.அனைத்து மாவட்டங்களிலிருந்து வரும்

பயிற்சியாளர்களுக்கென தங்கும் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. பதிவுத் துறைப் பயிற்சி மையத்தை நவீனப்படுத்திடவும் பயிற்சி நடைமுறைகளை மேம்படுத்திடவும் ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்**

பதிவுத்துறை கீழ்க்காணும் பதின்மூன்று சட்டங்களை நிர்வகிக்கின்றது. அவற்றின் விபரம் பின்வருமாறு:–

**அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்**

(1) இந்திய முத்திரைச் சட்டம், 1899 (மத்திய சட்டம் 2/1899).

(2) பதிவுச்சட்டம், 1908 (மத்திய சட்டம் 16/1908)

(3) தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 (தமிழ்நாடு சட்டம் 27/1975)

(4) சீட்டு நிதிகள் சட்டம், 1982 (மத்திய சட்டம் 40/1982)

## ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

(1) இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872 (மத்திய சட்டம் 15/1872)

(2) பிறப்பு இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886 (மத்திய சட்டம் 6/1886)

(3) பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம், 1932 (மத்திய சட்டம் 2/1932)

(4) இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932 (மத்திய சட்டம் 9/1932)

(5) சிறப்பு திருமணச் சட்டம், 1954 (மத்திய சட்டம் 43/1954)

(6) இந்து திருமணச் சட்டம், 1955 (மத்திய சட்டம் 25/1955)

(7) வரதட்சணைத் தடுப்புச் சட்டம், 1961 (மத்திய சட்டம் 28/1961)

(8) பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம், 1969 (மத்திய சட்டம் 18/1969)

(9) தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 (தமிழ்நாடு சட்டம் 21/2009)

**3.1 தமிழ் நாடு முத்திரைச் சட்டம்**

நமது மாநிலத்தில் முத்திரைத் தீர்வையை விதிக்கும் பொருட்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டம் சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றப்பட்டு மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெறும் பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முத்திரைச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- புதிய சட்ட முன்வடிவில், இந்திய முத்திரைச் சட்டத்தின் 8E மற்றும் 8F பிரிவுகளின்படி ரிசர்வ் வங்கி/ நீதிமன்றம்ஆணைகளின் அடிப்படையில் நடைபெறும் சொத்து பரிமாற்றத்திற்கு முத்திரைத் தீர்வை விதித்திட/விலக்களித்திட வழி வகை உள்ளது.

- குடும்ப உறுப்பினர்கள் பட்டியலில் கொள்ளுப் பேரன் / பேத்தி, இறந்த மகனின் மனைவி அல்லது இறந்த மகளின்

கணவன் ஆகியோரைச் சேர்த்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- குறைவு முத்திரைத் தீர்வையைத் தாமதமாக செலுத்தும்போது விதிக்கப்படும் வட்டியைத் தள்ளுபடி செய்ய அதிகாரம்.

- சந்தை மதிப்பு, வழிகாட்டி மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றிற்கு சட்டபூர்வமான அங்கீகாரம்

- செலுத்தப்படாத முத்திரைத் தீர்வையை வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் கீழ் வசூலிக்க மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் தனித் துணை ஆட்சியர்களுக்கு அதிகாரம்

- விற்பனை உடன்படிக்கைகளுக்கு 1 %முத்திரைத் தீர்வை வசூலிக்க வழி வகை

- அசையாச் சொத்துக்களை விற்பதற்கு எழுதிக் கொடுக்கப்படும் பொது அதிகார ஆவணங்களுக்கு சொத்தின் மதிப்பில் 2% முத்திரைத் தீர்வை வசூலிக்க வழி வகை.

## 4. ஆவணப் பதிவு மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்

விற்பனை, பரிவர்த்தனை, தானம், அடமானம் போன்ற ஆவணப் பதிவுகளுக்கு முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் ஆகியவை வசூலிக்கப்படுகிறது. மேலும், திருமணப் பதிவு, சங்கம் மற்றும் சீட்டுப்பதிவு, கூட்டு வணிகப்பதிவு, வில்லங்கச் சான்று மற்றும் நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்குதல் ஆகியவற்றின் மூலமும் வருவாய் ஈட்டப்படுகிறது.

**2006–2007 ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு:-**

| ஆண்டு | வருவாய் (ரூ. கோடியில்) | சதவீதம் | ஆவணங்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 2006–07 | 3407.50 | 45.08% | 2492294 | 23.90% |
| 2007–08 | 4232.36 | 24.21% | 2691002 | 7.97% |
| 2008–09 | 4099.54 | –3.14% | 2832686 | 5.27% |
| 2009–10 | 3818.25 | –6.86% | 2731026 | –3.59% |
| 2010–11 | 5020.50 | 31.49% | 3280503 | 20.12% |
| 2011–12 | 6619.98 | 31.86% | 3518435 | 7.25% |
| 2012–13 | 7455.41 | 12.62% | 2690351 | –23.54% |
| 2013–14 | 8055.74 | 8.05% | 2653291 | –1.38% |
| 2014–15 | 8279.64 | 2.78% | 2573931 | –2.99% |
| 2015–16 | 8562.38 | 3.41% | 2528561 | –1.76% |
| 2016–17 | 7007.74 | –18.16% | 2027916 | –19.80% |
| 2017–18 | 9121.53 | 30.16% | 2210595 | 9.01% |
| 2018–19 | 11071.02 | 21.37% | 2573478 | 16.42% |

**4.1 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) /தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு**

இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(1)ன் படி விற்பனை, பரிமாற்றம், தானம் மற்றும் ஏற்பாடு ஆகிய ஆவணங்களுக்கு அவற்றிலுள்ள சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். பதிவு அலுவலர் ஆவணத்தில் சொல்லப்பட்ட மதிப்பு சந்தை மதிப்பினை பிரதிபலிக்கவில்லை எனக் கருதுவாராயின், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(1)ன் படி சரியான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்க அந்த ஆவணத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு 21 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும். அவர் கள ஆய்வு செய்து சொத்தின் சந்தை மதிப்பினை நிர்ணயிப்பார். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் நிர்ணயிக்கப்படும் குறைவு முத்திரைத் தீர்வை ஆவணதாரரால் 2 மாதங்களுக்குள் செலுத்தப்படவில்லையென்றால் அந்த ஆவணத்தின் மீது வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆவணதாரர் மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் இறுதியாணை மீது ஆட்சேபணை இருப்பின், இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(5)ன் கீழ் பதிவுத்துறைத் தலைவரிடமும் மற்றும் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(10)ன் கீழ் உயர்நீதிமன்றத்திலும் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை பொறுத்து பதிவுத்துறைத் தலைவர் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(6)ன் கீழ் தன்னிச்சையாக சீராய்வு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(1)ன் கீழ் 2018–19–ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| முத்திரைத் தாள் மாவட்ட வருவாய் அலுவலர் / தனித்துணை ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட ஆவணங்கள் எண்ணிக்கை | 10897 |
| இறுதியாணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எண்ணிக்கை | 10156 |
| குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட்ட ஆவணங்கள் எண்ணிக்கை | 9446 |
| குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட்ட தொகை | ரூ. 62.63 கோடி |

### 4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி

சந்தை மதிப்பு வழிகாட்டியானது **1.4.2012** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. **3.97** கோடி சர்வே எண்களுக்கும், **1.84** இலட்சம் தெருக்களுக்குமான சந்தை வழிகாட்டி மதிப்புகள் பதிவுத்துறை இணையதள முகவரி https://tnreginet.gov.in யில் உள்ளன.

சந்தை மதிப்பு வழிகாட்டி நியாயமானதா என்பதை ஆய்வு செய்ய மாநில அளவில் பதிவுத்துறைத் தலைவர் தலைமையில் மதிப்பீட்டுக் குழுவும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் அந்தந்த மாவட்டத்தில் மதிப்பீட்டுத் துணைக் குழுக்களும் செயல்படுகின்றன. சந்தை வழிகாட்டி மதிப்புகளை அவ்வப்போது சீராக்கம் செய்யும் நடவடிக்கைகளை இக்குழுக்கள் மேற்கொள்கின்றன.

பொதுமக்களின் நலன் கருதி உள்ளாட்சித் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுடன் இட ஆய்வுகள் செய்யப்பட்டு சந்தை மதிப்பு வழிகாட்டி முரண்பாடுகள் இருப்பின் அவை உடனுக்குடன் களையப்பட்டு வருகின்றன. கிராமங்கள் மற்றும் நகரங்களில் நிலவும் சந்தை மதிப்பு

வழிகாட்டி முரண்பாடுகளை களைவதற்கும் சீராக்கம் செய்வதற்கும் மேற்குறிப்பிட்ட குழு ஒரு தீர்வாக அமைகிறது.

பொதுமக்களின் ஒருமித்த கருத்திற்கு ஏற்ப மதிப்பீட்டுக்குழுவால் மாநிலம் முழுமைக்கான சந்தை மதிப்பு வழிகாட்டியில் ஒரே சீராக 33% அளவுக்கு குறைத்து 9.6.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. விற்பனை, தானம், பரிமாற்றம் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அல்லாத நபர்களுக்கிடையே செய்து கொள்ளும் ஏற்பாடு போன்ற ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் 9.6.2017 முதல் 1% லிருந்து 4% ஆக மாற்றி நிர்ணயிக்கப்பட்டது.

## 5. உள்ளாட்சி அமைப்புகளுக்கு முத்திரை தீர்வையின் மீதான மிகுவரி பகிர்ந்தளித்தல்

முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. 2018–2019–ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட மிகுவரி ரூ.1789,18,60,644/- இதில் ரூ.53,67,55,819/-(3%) வசூல் கட்டணமாக பதிவுத் துறையால் இருத்திக் கொள்ளப்பட்டு, எஞ்சிய ரூ.1735,51,04,825/-(97%)

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் பங்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**6. பதிவுச் சட்டம், 1908**

**6.1 அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளை பதிவு செய்ய தடை**

பதிவுச்சட்டம் **1908–**ல் பிரிவு **22**A உட்சேர்க்கப்பட்டு, அதன்படி, அரசு மற்றும் மத சார்பான நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களின் விற்பனை மற்றும் அங்கீகாரம் இல்லாத மனைகளின் விற்பனை தொடர்பான கீழ்க்கண்ட ஆவணங்களின் பதிவினை, மறுக்க அச்சட்டத்தின் பிரிவுகளில் வழிவகை அளிக்கப்பட்டுள்ளது:-

(அ) அரசு, உள்ளாட்சி அமைப்புகள், இந்து சமய அறநிலையத்துறை, பூதான் மற்றும் வக்ஃப் போர்டு ஆகியவற்றுக்கு சொந்தமான நிலங்கள்.

(ஆ) அங்கீகாரம் பெறாத வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட விவசாய நிலங்கள் காப்பு வாசகத்தின்படி வீட்டு மனைகள் அங்கீகாரம் பெறப்படாதிருப்பினும், அவை ஏற்கனவே வீட்டுமனைகளாக பதிவு செய்யப்பட்டதாக இருப்பின், மேற்படி வீட்டு மனைகள் பதிவு செய்யப்படலாம்.

(இ) வாங்கியவரின் ஒப்புதல் இன்றி இரத்து செய்யப்படும் கிரைய ஆவணம்.

**6.2 உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு குறித்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் உச்சவரம்பு மாற்றியமைக்கப்பட்டது.**

உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு குறித்த ஆவணங்களுக்கு **14.08.2018** முதல் இந்திய முத்திரைச் சட்டம்,**1899** அட்டவணை **1** கூறு **6 (1)**(a) மற்றும் (b) ஆகியவற்றின்படி கடன்தொகை செலுத்தும் காலம் **3** மாதத்திற்குட்பட்டோ அல்லது அதற்கு மேற்பட்டோ இருந்தாலும் உச்சபட்ச முத்திரைத் தீர்வை ரூ.**30,000** மற்றும் உச்சபட்ச பதிவுக்கட்டணம் ரூ.**6,000** என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## 6.3 நிறுவனங்கள் இணையும் போது அல்லது மாற்றியமைக்கும் போது நடைபெறும் சொத்து பரிமாற்றங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைப்பு

உச்சநீதிமன்ற ஆணையின்படி நிறுவனங்கள் இணையும் போது அல்லது மாற்றியமைக்கும் போது ஏற்படும் சொத்து பரிமாற்றங்கள் **1899–**ஆம் ஆண்டு முத்திரைச் சட்டத்தின் கூறு **23–**ன் படி கிரையமாக கருதப்பட வேண்டுமென பதிவுத்துறைத் தலைவரால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது ( 7% முத்திரைத் தீர்வை மற்றும் **4%** பதிவுக் கட்டணம்).

இருப்பினும், மாநிலத்தில் தொழில்களை ஊக்குவிக்கவும் மற்றும் எளிதான வர்த்தகத்தை கருத்தில் கொண்டு **2019–2020–**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இத்தகைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை அதன் சந்தை மதிப்பு **2%** என்ற விகிதம் அல்லது மாற்றம் செய்யப்படும் பங்குகளின் சந்தை மதிப்பிற்கு **0.6%** என்ற விகிதத்தில் முத்திரைத் தீர்வினை குறைத்தும் பதிவுக் கட்டணமாக

ரூ.30,000/– விதிக்கலாம் என்றும் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் உரிய ஆணைகள் 01.03.2019 முதல் மேற்கண்டவாறு குறைத்து நடைமுறைக்கு கொண்டு வந்து அரசால் ஆணையிடப்பட்டது.

## 7. துணைமைப் பணிகள்

### 7.1 சங்கங்கள்

1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒரே மாதிரியான குறிக்கோள்களைக் கொண்டு ஒரு குழுவாக செயல்படும் மக்களால் ‘‘சங்கங்கள்’’ பதிவு செய்யப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள இலக்கிய, விஞ்ஞான, சமய, தொண்டு, விளையாட்டு மற்றும் பிற பிரிவுகளிலுள்ள அமைப்புகளை சங்கங்களாக பதிவு செய்ய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 வழிவகுக்கிறது. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், சங்கங்களின் பதிவுச் சட்டம் 1860–ன் (மத்திய சட்டம் 21/1860) கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வகை சங்கங்களையும் தமிழ்நாடு சட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக கருதலாம்.

ஒரு சங்கத்தை தோற்றுவிப்பதற்கு குறைந்த பட்சம் ஏழு உறுப்பினர்கள் தேவை. ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்த பட்சம் **3** உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழுவினை பெற்றிருக்க வேண்டும். சங்கங்களின் பதிவின்போது தாக்கல் செய்யப்படும் சங்கத்தின் அமைப்பு குறிப்பு மற்றும் துணைவிதிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் கோர்வை செய்யப்பட வேண்டும்.

சங்கங்கள் அமைக்கப்படும் மாவட்டத்தின், நிர்வாக மாவட்டப் பதிவாளர்களால் சங்கம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் ஒருவரால் அல்லது அக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒருவரால் சங்க ஆவணங்களை மாவட்டப் பதிவாளரிடம் தாக்கல் செய்து பதிவு செய்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு சங்கமும் நிதி ஆண்டிற்கு குறைந்தது ஒரு முறையாவது பொதுக் குழுக் கூட்டம் நடத்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கமும் நிதியாண்டு முடிவடைந்த ஆறு மாதங்களுக்குள் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டி சங்கத்தின் நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை பொதுக்குழுவின் முன்வைத்து அதன்

ஒப்புதலை பெறவேண்டும். பொதுக்கூட்டம் முடிந்த ஆறு மாதத்திற்குள் பதிவாளர் வசம் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும். Star 2.0 திட்டத்தின் கீழ் சங்கப்பதிவுச் சட்டத்தின் கீழான அனைத்து கோர்வைகளையும் இணையவழியில் தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. வரவு செலவு கணக்கு, இருப்பு நிலை ஏடு அறிக்கை (Balance Sheet)

2. தணிக்கையாளர் அறிக்கை

3. முடிந்த கணக்காண்டு, இறுதி நாளில் சங்க உறுப்பினராக இருந்தவர்கள் பட்டியல் (படிவம் VI)

4. சங்கம் செயலாற்றி வருவதற்கான உறுதிமொழி

5. மேலும் தேர்தல் நடத்தப்படும் பொதுக் குழுக்களுக்குப் பின்னர், புதிய செயல்குழு உறுப்பினர் பட்டியல் (படிவம் VII)

மேற்படி கோர்வைகள் **1978**–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கப்பதிவு விதிகளில் விதி **50**–ல் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், ஆராய்ந்து, குறைபாடுகள் உணரப்படின் அதனை சரிசெய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு மாவட்டப் பதிவாளரால் அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், **1975**ன் பிரிவு **49**ன் கீழ் கோர்வையில் தாமதம் **3** ஆண்டுகளுக்குள் இருப்பின் மாவட்டப் பதிவாளர் நிலையிலும், **3** ஆண்டுகளுக்கு மேல் **5** ஆண்டுகளுக்குள் இருப்பின் பதிவுத்துறைத் தலைவர் அவர்களாலும் மற்றும் **5** ஆண்டுகளுக்கு மேல் இருப்பின் அரசாலும் தாமதம் மன்னிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எந்த ஒரு பதிவு பெற்ற சங்கமும் தனது கோர்வைகளில் தாமதம் ஏற்படுத்தினால், தாமதத்திற்கான உரிய தண்டத்தொகை செலுத்தி தாமதப் பிழைப்பொறுத்தம் செய்து உரிய அலுவலரால் ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் சங்கப்பதிவாளரால் கோர்வைகள் ஏற்கப்படும்.

சங்கங்களின் பதிவாளர்கள் சங்கங்கள் பதிவுச் சட்டம், **1975**ன் பிரிவு **36(1)**ன் கீழ் ஒரு சங்கத்தினை விரிவான

விசாரணை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணையின் முடிவில் சங்கம் தனது நோக்கங்களின் படியும், சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு நடத்தப்படவில்லை என மாவட்டப் பதிவாளர் கருதும் பட்சத்தில், சங்கத்தினை சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு **37**ன் கீழ் கலைத்து ஆணையிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வப்போது சங்கங்களின் செயல்பாடுகளை தன்னிச்சையாகவோ புகாரின் பெயரிலோ ஆய்வு செய்யும் பணியும் மாவட்டப் பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பதிவுப்பெற்ற ஒரு சங்கம் முறையாக செயல்படவில்லை அல்லது சங்க அலுவல்கள் திறமையற்ற தன்மையில் செயல்படுகிறது அல்லது சங்கத்தின் செயல்கள் அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதாக இல்லை அல்லது சங்கப் பதிவுச் சட்டப்பிரிவுகளையோ விதிகளையோ மீறியுள்ளதாக கருதினாலோ சங்கத்திற்கு உரிய காரணம் தெரிவிக்க ஒரு வாய்ப்பளித்து சங்கத்தை நிர்வகிக்க ஒரு தனி அலுவலரை நியமிக்க பிரிவு **34–A**ன் கீழ் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**31.03.2019** அன்றுள்ளபடி மாநிலம் முழுமைக்கும் **1,97,494** சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**7.2. சீட்டுகள்**

மாநிலத்தில் செயல்படும் சீட்டுகள் மற்றும் சீட்டு குழுக்களின் செயல்பாட்டினை சீட்டு நிதிச்சட்டம், **1982** நிர்வகிக்கிறது. சீட்டு நிதிச்சட்ட விதிகளின்படி சீட்டு பதிவாளராக பதிவுத்துறைத் தலைவர் உள்ளார். மாநில அளவில் சீட்டுகள் தொடர்பான வேலைகள் கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் நிலையில் உள்ள கூடுதல் சீட்டுப் பதிவாளரால் கண்காணிக்கப்படுகின்றன. சீட்டு நிதிச் சட்டம் **1982**–ன் கீழ் துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள் இணைச் சீட்டுப் பதிவாளர்களாகவும், மாவட்டப் பதிவாளர்கள் துணைச் சீட்டுப் பதிவாளர்களாகவும் செயல்படுவார்கள்.

**சீட்டு நடுவம்**

சீட்டு நிறுவனங்களின் பணிகளை கண்காணிப்பதுடன் சீட்டு நடத்தப்பட்டது தொடர்பாக ஏற்படும் சச்சரவுகள் சீட்டு நடுவர் மன்றங்களில் முறையிடப்படுகின்றன. இவ்வாறான வழக்குகளில் விசாரித்து ஆணையிட சென்னை (வடக்கு மற்றும் தெற்கு), மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர்

ஆகிய மூன்று இடங்களில் சீட்டு நடுவர்கள் உள்ளனர். பிற இடங்களில் நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் சீட்டு நடுவராக பணிபுரிகின்றனர்.

**மேல்முறையீடு**

மேற்படி சீட்டு நடுவர்களால் வழங்கப்படும் தீர்ப்பாணைகளால் பாதிக்கப்படுவோர், அவ்வழக்கு குறித்து அரசிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

தமிழகத்தில் **31.03.2019**–ல் **2,984** சீட்டு நிறுவனங்களும், அச்சீட்டு நிறுவனங்களால் **67,815** சீட்டு குழுக்களும் நடத்தப்பட்டுவருகின்றன.

**7.3. கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்**

**1932**–ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தின்படி, மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். நிறுவனத்தின் கட்டமைப்பில் மாற்றம் ஏதும் செய்யப்படின் இச்சட்டத்தின் கீழ் அதனை கோர்வை செய்ய வேண்டும்.

**31.03.2019**–ல் பதிவு செய்யப்பட்ட கூட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை **6,64,917** ஆகும்.

**7.4 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்**

பொதுமக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு **10,000** மக்கள் தொகைக்கு ஒரு முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற வகையில் பணியிடம் ஏற்படுத்தி முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். நாளது தேதியில் மாநிலத்தில் மொத்தம் **3,890** முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் பணியினை கண்காணிக்கும் பொருட்டு முத்திரைத்தாள் விற்பனை யாளர்களின் கணக்குகள் கருவூலம் மற்றும் சம்பள கணக்கு அலுவலக கணக்குகளுடன் மாதம் ஒரு முறை மாவட்டப் பதிவாளர்களாலும் வாரம் ஒரு முறை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர்களாலும் சரிபார்க்கப்படுகின்றன.

கேட்பு காசோலை, மின்னணு முத்திரைத்தாள் (e-Stamping) மற்றும் இணையவழி பணம் செலுத்தும் முறை (On-line payment through credit card,Debit card and Unified Payment Interface(UPI)) போன்றவற்றின் மூலமாகவும் முத்திரைத் தீர்வையை செலுத்தலாம்.

தற்போது ஸ்டார் **2.0** மென்பொருளில் முத்திரைத் தாள்களில் அச்சிடப்பட்டுள்ள வரிசை எண்ணை உள்ளீடு செய்யவும், முத்திரைத்தாள் கையிருப்பு மற்றும் விற்பனை

விவரங்களை உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளீடு செய்யும் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு பதிவுத்துறை இணையதள முகவரி https://tnreginet.gov.inயில் (User ID/Login) உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

## 7.5 ஆவண எழுத்தர்கள்

பதிவுத் துறையில் ஆவண எழுத்தர்கள் ஆவணங்கள் தயாரிப்பதில் முக்கியப் பங்கு ஆற்றி வருகின்றனர். தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிமவிதி 1982–ன்படி அரசு நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. மாநில அளவிலானஉரிமம், மாவட்ட அளவிலானஉரிமம், சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

தற்போது ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை (31.03.2019–ல் உள்ளபடி)

| | |
|---|---|
| மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 2765 |
| மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 2046 |
| சார்பதிவக உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 324 |
| மொத்த உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | 5135 |

பொதுமக்களுக்கு கீழ்க்கண்ட நபர்களால் ஆவணங்கள் எழுதித் தரப்படுகின்றன:

(i) வழக்கறிஞர்

(ii) உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்

ஆவணதாரர்கள் பதிவுத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆவண மாதிரிப் படிவங்களை பயன்படுத்தி தாங்களாகவே எழுதிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 7.6 திருமணப் பதிவு

2009–ஆம் ஆண்டு தமிழ் நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர், மாநிலத்தில் நடத்தப்படும் அனைத்துத் திருமணங்களும், மத பாகுபாடின்றி, பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2018–19–ஆம் ஆண்டில் 79,646 திருமணங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2018–19–ஆம் ஆண்டில் 1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் 55,031 திருமணங்களின் பதிவும், 1954–ஆம் ஆண்டு சிறப்புத்

திருமணச் சட்டத்தின் கீழ் 6,062 திருமணங்களின் பதிவும் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மீது கட்டணமாக ரூ.1.80 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் 1872–ன் கீழ் 2018–19–ஆம் ஆண்டில் 5,610 திருமணங்களின் மீதான சான்றிட்ட நகல்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு கட்டணமாக ரூ.2.24 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 8. துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

### 8.1 ஒருங்கிணைந்த இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கம்

கணினிமயமாக்கலில் முன்னோடியான இத்துறை பொதுமக்களுக்கு வழங்கி வரும் சேவைகளின் தரத்தை உயர்த்த இணையம் சார்ந்த வலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளானது, இணையவழி பரிமாற்றங்கள், இணையவழி பணம் செலுத்துகை, வருவாய் பதிவு விவரங்கள் இணையவழி சரிபார்த்திடுதல், PAN Card விவரங்களை இணையவழி சரிபார்த்தல் மற்றும் மாநிலம் முழுமையிலும் சீரான மென்பொருள் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் தயாரிப்பு, வன்பொருள் வழங்கல், நிறுவிடுதல், வலை இணைப்பு, அயலாக்க பணியமைப்பு முறை மூலம் சார்பதிவக சேவைகளை செயல்படுத்திடுதல், திட்டச் செயல்பாட்டிலிருந்து ஐந்து ஆண்டு காலத்திற்கு வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு ஆகியவை உள்ளடக்கிய இத்திட்டம் ஒப்பந்தமுறையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நிர்வாக வெளிப்படைத் தன்மை மற்றும் பொதுமக்களின் எளிய அணுகுமுறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புதிய மேம்படுத்தப்பட்ட மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஸ்டார் 2.0 (STAR – Simplified and Transparent Administration of Registration) எனும் இத்திட்டம் முதற்கட்டமாக 12.2.2018 அன்றும் இரண்டாவது கட்டமாக 10.12.2018 அன்றும் துவக்கி வைக்கப்பட்டது.

**சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் STAR 2.0 மென்பொருள் வாயிலாக பொது மக்களுக்கு விரைவான ஆவணப்பதிவு மற்றும் இணையவழி சேவைகள் வழங்குவதால் பதிவுத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ''சிறப்பு முயற்சிகள் விருது – 2018'' வழங்கப்பட்டது.**

**8.1.1 ஸ்டார் 2.0–ல் (https://tnreginet.gov.in) முன்னிலைப்படுத்தப்படும் முதன்மையான சிறப்பம்சங்கள்:**

i. பொது மக்கள் மற்றும் சார்பதிவாளர்களின் நேரடி தொடர்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் இடைத்தரகர்களின் தலையீடு தவிர்க்கப்படுகிறது.

ii. தங்கள் வசம் உள்ள / வசமாக்கப்பட இருக்கும் சொத்தின் முக்கிய விவரங்களை எந்த இடைத்தரகருமின்றி அவர்களாலேயே அளித்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு தனியாகவும் ஆவண எழுத்தர்களுக்கு தனியாகவும் என தனித்தனி உள்நுழைவு ஏற்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர்களுக்கும் தனியாக உள்நுழைவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

iii. ஆவணப்பதிவில் வரிசைக்கிரம முறை:- உரிய சார்பதிவகத்தில் முன் நேர ஒதுக்கீட்டு முறை ஒருங்கிணைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் நேர சேமிப்பு, வரிசைக்கிரமமான பதிவு, பாகுபாடற்ற சீரான பதிவிற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

iv. மைய கணினியில் (central server) 1975 முதல் தரவுகள் உள்ளதால், இணையவழியாக வில்லங்கச்சான்றுகள் பெற இயலும்.

v. கணினிமயமாக்கப்பட்ட காலத்திற்கான சான்றிட்ட நகல்கள் இணையவழியாக பெற்றிட இயலும்.

vi. ஆவணப் பதிவின்போதே வாங்குபவர், விற்பவர் மற்றும் ஆவணம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் நபர் ஆகியோரது விரல் ரேகைகள் எடுக்கப்பட்டு சேமிக்கப்படுவதால் ஆவணதாரரால் பாதுகாப்பான முறையில் ஆவணத்தினை திரும்ப பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படுகிறது. ஆவணதாரருக்கு எச்சரிக்கை செய்தியினை குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வசதி மூலம் தவறான ஆவணப் பதிவுகள் தடுக்கப்படுகிறது.

vii. வங்கிகள் மூலம் கட்டணங்கள் செலுத்திடுதல் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

viii. சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களுக்கு இணையவழி பட்டா மாற்ற விவரங்கள் அனுப்பிடுதல் மற்றும் இவ்விவரத்தினை குறுஞ்செய்தி மூலம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஒப்புகையுடன் ஆவணதாரருக்கு அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ix. ஆவணம் பதிவிற்கு தாக்கல் செய்யப்பட்டது முதல் ஆவணம் திருப்பி அளிக்கப்படும் வரையிலான விவரங்கள், நிலுவை ஆவணங்கள், வில்லங்கச்சான்று / சான்றிட்ட நகல்கள் வழங்கப்படும் நிலைகள், மதிப்பு குறைவான ஆவணங்கள் முத்திரைத்தாள் தனித்துணை ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட விவரம், கள ஆய்விற்கு பின் குறைவு முத்திரைத் தீர்வை விவரம் மற்றும் கட்டணம் போன்ற விவரங்கள், கட்டிட கள

ஆய்வின் நிலை போன்ற விவரங்கள் குறித்த குறுஞ்செய்தி பொதுமக்களுக்கு அனுப்பப்படுகிறது.

x. அனைத்து திருமணப்பதிவுகள், சங்கப் பதிவு, சீட்டு நிதி, நிறுவண பதிவு போன்ற அனைத்து செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

xi. கட்டணமில்லா தொலைபேசி எண் **1800–102–5174** மூலம் மக்கள் தங்கள் குறைகளை தீர்ப்பதற்கும் சந்தேகங்களை நிவர்த்தி செய்திடுவதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

xii. பணிப்பாய்வு அடிப்படையிலான அமைப்பு (Work flow based system) ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

xiii. புனேயிலுள்ள பேரிடர் மீட்பு மையம், பெருங்குடியிலுள்ள மாநில தரவு மையம் மற்றும் சாந்தோமிலுள்ள பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் ஆகிய மூன்று இடங்களில் தரவுகள் சேமிக்கப்படுகின்றன.

## 8.2 இணைய வழி வில்லங்கச் சான்று மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்குதல்

இணைய வழி வில்லங்கச் சான்று மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்க ஏதுவாக **1949–**ஆம் ஆண்டு பதிவு விதிகளில் புதியதாக விதி **147**A உட்புகுத்தப்பட்டது. **10.12.2018** அன்று விரைவுக் குறியீடு (QR Code) மற்றும் மின்னணு கையொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட

நகல் ஆகியவற்றை இணையதளம் மூலம் வழங்கும் புதிய வசதியை மாண்புமிகு முதலமைச்சர் துவக்கி வைத்தார். இதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சொத்திற்கும் வில்லங்கச் சான்று மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகியவை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லாமலேயே பொதுமக்கள் இணையதளம் மூலம் மனு செய்து பெற்று கொள்ளலாம்.

### 8.3 இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP camera)

சார்பதிவாளர் அலுவலக நடவடிக்கைகளை தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களிலிருந்து கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகங்களிலும் இரண்டு இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

### 8.4 இணையவழியாக பணம் வங்கிகளில் செலுத்திடும் முறை

துறையின் கட்டணங்களை செலுத்துவதை எளிமையாக்கும் பொருட்டு இணையதளம் மூலமாக பணம் செலுத்தும் வசதி **11** வங்கிகள் மூலம் செயல்படுத்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பாரத ஸ்டேட் வங்கி

மூலம் ஒற்றை சாளர முறையில் இணையதளம் மூலம் பணம் செலுத்தும் வசதி **10.12.2018** முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. நமது நாட்டின் நிதி கட்டமைப்பில் உள்ள பெரும்பாலான வங்கிகளின் இம்முறையில் பணம் செலுத்தலாம். மேலும் இணைய வங்கி சேவை கடன் / பற்று அட்டை மற்றும் ஒருங்கிணைந்த கட்டண முகப்பு ஆகியவற்றின் மூலமும் கட்டணங்களை செலுத்தலாம். ரூ.1,000/– வரையிலான கட்டணங்களை வசூலிப்பதற்கு அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் இயந்திரங்கள் (PoS machine) வழங்கப்பட்டுள்ளன.

**8.5 இணையதளம் மூலம் வில்லங்கச் சான்றுகளை கட்டணமில்லாமல் பார்வையிடும் வசதி**

சொத்து பரிமாற்றங்களில் வெளிப்படைத் தன்மையைக் கொணரும் பொருட்டு பதிவு செய்யப்பட்ட சொத்து பரிமாற்ற விபரங்களை துறையின் இணையதளம் வழியாக எவ்வித கட்டணமுமின்றி எங்கிருந்தும்/எப்போதும் பார்வையிடும் வசதி தொடங்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள சொத்து உரிமையாளர்கள் தங்களது சொத்து தொடர்பான

விவரங்களை எங்கிருந்தும் ஆய்வு செய்யும் வசதி இம்முறையில் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது **1975** முதல் நாளது தேதிவரை பதிவு செய்யப்பட்ட ஆவண விவரங்கள் மின்னணு மயமாக்கப்பட்டு அக்காலத்துக்குட்பட்ட வில்லங்கச்சான்றை கட்டணமின்றி இணைய வழியாக பதிவிறக்கம் செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சராசரியாக **20,000** பயனாளிகள் இவ்வசதியை பயன்படுத்துகின்றனர்.

### 8.6 மின்னணு முத்திரையிடுதல் (e-Stamping)

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, முத்திரைத் தீர்வையை செலுத்த மாற்று வழியாக மின்னணு முத்திரையிடுதல் முறையானது திருவாளர்கள் SHCIL (Stock Holding Corporation of India Limited) மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மின்னணு முத்திரையிடுதல் என்பது பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய எந்த அளவிலான மதிப்பிற்கும் ஒரே சான்றாக வழங்கப்படும் "முத்திரைச் சான்றாகும்". இதனை

முத்திரைத் தாள்களுக்கு பதிலாக விற்பனை, அடமானம் போன்ற எவ்வகையான ஆவணங்களுக்கும் பயன்படுத்தலாம்.

தற்போது சென்னை மண்டலத்திலுள்ள 63 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு முத்திரையிடும் முறை நடைமுறையில் உள்ளது.

மின்னணு பதிப்பு முறையில் வசூல் விபரம் பின்வருமாறு:

| வருடம் | வழங்கப்பட்ட மின்னணு முத்திரைச்சான்றுகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2010–11 | 1206 | 24.11 |
| 2011–12 | 6478 | 113.74 |
| 2012–13 | 11924 | 180.90 |
| 2013–14 | 32121 | 253.90 |
| 2014–15 | 67062 | 236.94 |
| 2015–16 | 82384 | 347.78 |
| 2016–17 | 100587 | 246.02 |
| 2017–18 | 132757 | 220.46 |
| 2018–19 | 94478 | 245.70 |

## 8.7 வலை நிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகை பதிவு (Bio metric device) செயல்படுத்திடுதல்

வலைநிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகைக் கருவி (Bio metric device) மூலம் புகைப்படம் மற்றும் விரல் ரேகை மின்னணு முறையில் பதிவு செய்யப்படுகிறது. பதிவு நடைமுறையில் மனிதத் தவறுகள், ஆள்மாறாட்டம், போலி நடவடிக்கைகள் ஆகியவற்றினை தடுத்திட வலைநிழலி மூலம் புகைப்படம் எடுத்திடவும் மின்னணு ரேகைக் கருவி மூலம் விரல் ரேகைப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. வலை நிழலி மூலம் புகைப்படம் எடுத்தல் மற்றும் மின்னணு ரேகைப்பதிவு முறை மூலம் ரேகை எடுத்திடும் முறை அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறை கையாளப்படுவதால் போலி ஆவணப்பதிவுகள் பெருமளவு குறைந்துள்ளன.

## 8.8 CUG இணைப்புகள் (CUG Mobile connections)

சரியான நேரத்தில் பாதுகாப்பான முறையில் விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு ஒருங்கிணைந்த அலகுக்

குழு (Closed Unit Group) கையடக்க அலைபேசி இணைப்புகள் அனைத்து பதிவுத்துறை அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

**8.9 சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆவணத் தொகுதிகளை இலக்கமயமாக்கல் (Digitization of Documents in Sub Registrar Offices)**

சார்பதிவாளர் அலுவலகங்களில் நிரந்தரமாக பேணப்படும் அனைத்து ஆவணங்களையும் மின்னணு மயமாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென அரசு ரூ.89.17 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. 1865–ஆம் ஆண்டு முதல் 05.07.2009 வரையிலான பழைய ஆவணங்களை ஒளிவருடல் (Scanning) செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**8.10 இணையவழி பட்டா மாறுதல்**

STAR 2.0 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பு ஆவணங்களை பதிவு செய்தவுடன் பட்டா மாறுதல் தொடர்பான படிவங்களை இணையதளம் மூலம் அனுப்பும் வசதி ஏற்பட்டுள்ளது. ஆவணப்பதிவு முடிந்தவுடன் பட்டா மாறுதல் செய்யும் போது வருவாய் துறை அலுவலர்களுடன்

பொது மக்கள் நேரடி தொடர்பை குறைக்கும் பொருட்டு, முதற்கட்டமாக, முழு அளவிலான நிலங்களைப் பொறுத்து ஆவணம் பதிவு செய்தவுடன் இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தினை பெரம்பலூர் மாவட்டத்தில் 10.03.2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

## 8.11 BSNL மூலம் மாற்று VPN இணைப்பு

ஸ்டார் 2.0 மென்பொருள் இயக்கத்திற்கு வலை இணைப்பு இன்றியமையாததால், முதன்மை இணைப்பு துண்டிப்பு ஏற்படும் போது அதற்கு மாற்றாக மாற்று இணைப்பு அவசியமாகிறது. இதன்படி பதிவுத்துறையில் உள்ள அனைத்து 700 அலுவலகங்களுக்கும் 2 MBPS MPLS-VPN connectivity (BSNL) வழங்கப்பட்டுள்ளது. இது தடையற்ற இணைப்பினை உறுதி செய்துள்ளது.

மேலும், மேற்படி இரண்டு இணைப்புகளும் ஒரே நேரத்தில் துண்டிப்பு நிகழும் போது அவசர ஏற்பாடாக அலுவலகங்களில் உள்ள BSNL Broadband இணைப்பு மூன்றாவது இணைப்பாக பயன்படுத்தி ஸ்டார் 2.0 மென்பொருள் இயக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## 8.12 மடிக்கணினிகள் வாங்குதல் (Purchase of Laptops)

பதிவுத்துறையின் தலைமை அலுவலகத்தில் கள அலுவலர்களுக்குமிடையே விரைவான தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்திட பழைய காலங்கடந்த மடிக்கணினிகளுக்கு பதிலாக புதிய மடிக்கணினிகள் இணைய வசதியுட.ன் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் துறையின் அலுவலர்களுக்கிடையே விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு ஏதுவாகியுள்ளது.

## 9. உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளில் மேம்பாடு

### 9.1 கட்டடங்கள் கட்டுதல்

பதிவுத்துறையில் 575 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 3 முகாம் அலுவலகங்கள் இயங்குகின்றன . இவற்றில் 488 அலுவலகங்கள் அரசு கட்டிடத்திலும், 90 அலுவலகங்கள் தனியார் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன.

2011–2012–ஆம் ஆண்டு முதல் நாளது வரை ரூ.110.15 கோடி மதிப்பீட்டில் 187 சார்பதிவாளர் அலுவலகங்களும் ரூ.44.74 கோடி மதிப்பீட்டில் 54 சார்பதிவகங்கள் உள்ளடங்கிய

27 ஒருங்கிணைந்த அலுவலகங்களுக்கும் சொந்த கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றுள் 35 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 21 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகக் கட்டடங்களும், 163 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களும் கட்டிமுடித்து திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### 9.2 தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல்


பதிவுத்துறையில் பேணப்படும் அனைத்து பதிவுருக்களும் நிரந்தரமான பதிவுருக்கள் என்பதால் அவற்றை தீ விபத்திலிருந்து பாதுகாப்பது அவசியமாகும். எனவே பதிவுத்துறையில் உள்ள 9 துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகங்கள், 50 மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள், 575 சார்பதிவாளர் அலுவலகங்கள், 11 தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்கள் மற்றும் பதிவுத்துறை பயிற்சி நிலையம் ஆகியவற்றிற்கு தீத்தடுப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**10. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி **2018–19**–ஆம் ஆண்டில் இத்துறையில் பெறப்பட்ட **14,572** மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து மனுக்களுக்கும் தகவல் அளிக்கப்பட்டு, இதன் மூலம் **ரூ.1,51,684/–** கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.


**கே.சி. வீரமணி**

**வணிகவரித் துறை அமைச்சர்**




வருவாய்
(ரூ.கோடியில்)
12000
10000
8000
6000
4000
2000
0
4232.36
4099.54
3818.25
5020.5
6619.98
7455.21
8055.74
8279.64
8562.38
7007.74
9121.53
11071.02
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
நிதி ஆண்டு


வருவாய்
2007-08, 4232.36
2008-09, 4099.54
2009-10, 3818.25
2010-11, 5020.5
2011-12, 6619.98
2012-13, 7455.21
2013-14, 8055.74
2014-15, 8279.64
2015-16, 8562.38
2016-17, 7007.74
2017-18, 9121.53
2018-19, 11071.02



ஆவணப்பதிவு
ஆவணங்களின் எண்ணிக்கை
4000000
3500000
3000000
2500000
2000000
1500000
1000000
500000
0
2691002
2832686
2731026
3280503
3518435
2690351
2653291
2573931
2528561
2027916
2210595
2573478
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
நிதி ஆண்டு

## ஆவணப்பதிவு


2016-17, 2027916
2007-08, 2691002
2008-09, 2832686
2009-10, 2731026
2010-11, 3280503
2011-12, 3518435
2012-13, 2690351
2013-14, 2653291
2014-15, 2573931
2015-16, 2528561



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.07.2018 அன்று கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.



பதிவுக்கு முன்னர் பொதுமக்கள், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.07.2018 அன்று தஞ்சாவூர் ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகம் திறந்து வைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.12.2018 அன்று திருப்பனந்தாள் சார்பதிவாளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.12.2018 அன்று படப்பை, சார்பதிவாளர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.




படப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணப் பதிவு நடைபெறுகிறது.



**15.8.2018–**ல் சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் STAR 2.0 மென்பொருள் வாயிலாக பொது மக்களுக்கு விரைவான ஆவணப்பதிவு மற்றும் இணையவழி சேவைகள் வழங்குவதால் பதிவுத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ‘‘சிறப்பு முயற்சிகள் விருது – **2018**’’ வழங்கப்பட்டது.